1974 மார்ச் 14]

திரு. டெ. சௌந்தரபாண்டியன் : பழனி கோயில் நிதியிலிருந்து எந்தெந்த சமுதாயப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 17 வகையான சமுதாயப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. பெண்கள் கல்லூரி, சமய வளர்ச்சி சொற்பொழிவுகள், கீழ்த்திசை பண்பாட்டுக் கல்லூரி, கலைக் கல்லூரி (ஆண்கள்), நாதஸ்வரக் கல்லூரி, செந்தமிழ் கல்லூரி, ஏழை விடுதி, ஏழை மாணவர் மதிய உணவு, நூல் நிலையம், வேத ஆகமப்பள்ளி, கோசாலா, சித்த வைத்திய சாலை, பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுநிதி, கார்த்திக் பள்ளி, மருத்துவமனை, செவிடர்பள்ளி, குழந்தைகள், முதியோர்கள் காப்பகங்கள் என்ற வகையில் செலவிடப்படுகின்றன.

* 430 விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோவில்களில், ஏழைக் குழந்தைகளுக்கு பால் வழங்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) தமிழ் புத்தாண்டு தினத்திலிருந்து (13—4—1973) மூன்று வயதிற்குட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு தினசரி தலா 200 மில்லி லிட்டர் பால் ஒவ்வொரு திருக்கோயிலின் நிதி வசதிக்குட்பட்டு வழங்க ஏற்பாடாகி, அதன்பேரில் 64 திருக்கோயில்களிலிருந்து 648 குழந்தைகளுக்கு இத்திட்டப்படி இலவசமாக பால் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 31—12—1973 முடிய 11 திருக்கோயில்களில் 147 குழந்தைகளுக்கு இலவசமாக தினசரி தலா 200 மில்லி லிட்டர் பால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டம் அனுமதிக்கப்பட்ட எஞ்சியுள்ள 53 திருக்கோயில்களில் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுககப்பட்டு வருகிறது. மதுரை அருள்திரு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் இத்திட்டத்தின்கீழ் தினசரி பால் கொடுப்பது தவிர, ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் 7 லிட்டர் பால் திருக்கோயில் செலவிலும், 15 லிட்டர் பால் அன்பளிப்பாகப் பெற்றும் (தினசரி 22 லிட்டர் பால்) ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த கணக்கிலிருந்து தலா பத்து குழந்தைகள்தான் வருகின்றன, பால் வழங்கப்படும் குழந்தைகள். பழனி கோயிலைப் பற்றிச் சொன்னார்கள். அதிகமான வருமானம் வரும் கோயில்களில் இந்தத் திட்டத்தின்படி அதிகமான குழந்தைகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

[1974 மார்ச் 14

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில்களின் வருமானத்தைப் பொறுத்தும், அந்தக் கோயில்களிலே உள்ள உபரி நிதியைப் பொறுத்தும்தான் வழங்கப்படுகிறதே தவிர எல்லாக் கோயில் களிலும் பத்து குழந்தைகள் என்ற வீதத்தில் வழங்கப்படவில்லை. எந்தெந்தக் கோயில்களில் உபரி நிதி அதிகமாக இருக்கிறதோ அந்த நிதியின் தன்மையைப் பொறுத்து குழந்தைகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : லிஸ்டட் டெம்பிள்ஸ் எல்லாவற்றிலும் இப்படி ஒழுங்கான முறையில் பால் வழங்கப்படுகிறதா ? ஒழுங்கான முறையில் பால் வழங்கப்படுகிறதா என்று கண்காணிக்க கமிட்டி போடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அதிலே சந்தேகம் வர வேண்டிய அவசியம் இல்லை, ஏழைக் குழந்தைகளுக்கு என்று வழங்கப்படுகிற பால் ஒழுங்காகத்தான் வழங்கப்படுகிறது. லிஸ்டெட் டெம்பிள்ஸ் என்று சொல்லப்பட்டிருப்பவற்றிலும் எந்தக் கோயில்களில் உபரி நிதி இருக்கி றதோ அந்தக் கோயில்களில் மட்டும் பால் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி *இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. 1974–75-ம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். திரு கே. எம். ராஜகோபால் நேற்று ஐந்து நிமிடம் பேசியாகிவிட்டது. இப்போது ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

*திரு. க. மு. இராசகோபால் : குறுக்கீடு இல்லாமல் இருந்தால் ஐந்து நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

தலைவர் அவர்களே, உலகத்திலே மனிதனை மனிதன் சுரண்டி வாழ் கின்ற கொடுமையை இந்த நாட்டிலே ஒழிக்க வேண்டுமென்று தன் னுடைய உள்ளத்திலே அடங்கிக் கிடந்ததை, அவன் நெஞ்சத்திலே ஊறிக் கிடந்ததை வடித்து விட்டு மடிந்தான் காரல் மார்க்ஸ், இங்கர்சால். அதைச் செயல் வடிவில் கொண்டு வந்தவன் மாபெரும் புரட்சி வீரன் ரஷ்ய நாட்டு லெனின். அவனைத்தான் மக்கள் மத்தியில் புரட்சிக்காரன் என்று ஏற்றுக் கொள்ளலாம்.